# J/VELANAI CENTRAL COLLEGE
# யா/வேலணை மத்திய கல்லூரி

*கௌரவ தலைவர்*
*கௌரவ செயலாளர்*
*மற்றும்*
*ஆட்சிமன்ற உறுப்பினர்கள்,*
*பேரவை உறுப்பினர்கள்*
*பழைய மாணவர் சங்கம் - கனடா,*
*வேலணை மத்திய கல்லூரி*

*அனைவருக்கும்,*
*வணக்கம்*

## ஆசிரியர் பணி போற்றல் செயற்றிட்டம் - 2016

வேலணை மத்திய கல்லூரியின் கனடா பழைய மாணவர் சங்கம் என்ற பேரவை கல்லூரியின் வளர்ச்சிக்காக காலத்திற்கு காலம் பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

அந்த வகையில் 2016 இல் கல்லூரியின் பரிசளிப்பு நிகழ்வில் தன்னலம் கருதாது பணியாற்றும் ஆசிரியப்பெருந்தகைகளை கௌரவித்து பரிசில் வழங்கும் மிகச்சீரிய திட்டத்தினை கௌரவ தலைவர் சிவஞானம் இளஞ்செழியன் அவர்கள் முன்மொழிந்து செயற்படுத்த ஆவல்கொண்டமை எமது கல்லூரி முகாமைத்துவக்குழுவினை ஆட்கொண்டது.

கல்லூரியில் ஆசிரியப்பணியாற்றுவதற்கு பல்வேறு பிரதேசங்களிலிருந்து பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் ஆசிரியர்கள் வருகை தருகின்றார்கள். அவ்வாறு வருகை தரும் ஆசிரியர்களின் சேவையினை வினைத்திறனுடன் பெறுவதற்கும் அவர்கள் தீவக மாணவர்களின் கல்வியினை மேம்படுத்துவதற்கு திடசித்தம் கொள்வதற்கும் **"ஆசிரியர் பணி போற்றல் செயற்றிட்டம்"** உந்துசக்தியாக அமையும்.

இச்செயற்றிட்டம் ஆக்க சிந்தனையானதாகும். பழைய மாணவர் சங்கங்களின் வரலாற்றின் ஒரு மைல்கல்லாகவும் அமையும். இச்செயற்றிட்டத்தை முன்மொழிந்து செயற்படுத்த முனையும் கனடா பழைய மாணவர் சங்கத்தின் ஆட்சிமன்ற உறுப்பினர்களுக்கு எமது நன்றிகள்.

இச்செயற்றிட்டத்திற்கான ஆசிரியர் பின்வரும் வழிமுறைகளினூடாக தெரிவு செய்யப்பவர்.

1. மாணவர்களின் கல்விப்பெறுபேறுகள்.
2. மாணவர்களின் இணைப்பாடவிதான செயற்சாதனைகள்.
3. மாணவர்களின் ஒழுக்க விழுமிய மேம்பாட்டிற்கான அர்ப்பணிப்புக்கள்.
   இவற்றினை அடிப்படையாகக் கொண்டு மாணவர்கள், பகுதித்தலைவர்கள் ஆகியோரின் சிபாரிசுகளை முதன்மைப்படுத்தி பாடசாலை மட்ட ஆசிரியர் செயற்பாட்டுக்குழுவின் (SBTD) பரிந்துரையின் அடிப்படையில் கல்லூரி

முதல்வர், கனடா பழைய மாணவர் சங்கத்தின் கௌரவ தலைவர் மற்றும் பாடசாலை அபிவிருத்திக்குழு செயலாளர் ஆகியோரினால் இறுதித்தெரிவு நடைபெறும்.
இச்செயற்றிட்டம் ஆரோக்கியமான கற்றல் கற்பித்தல் செயற்பாட்டினை வலுப்படுத்தும் ஒரு செயற்றிட்டமாக அமையும்.

**மதிப்பார்ந்த கனடா பழைய மாணவர் சங்கத்தின் பேரவை உறுப்பினர்களே!**

**ஒவ்வொரு வருடமும் பரிசளிப்பு நிகழ்வில் ஆசிரியர் பணி போற்றல் செயற்றிட்டம் தீர்மானகரமாக நிறைவு பெறவும், கௌரவ தலைவர் திருமிகு சி.இளஞ்செழியன் அவர்களின் புத்தாக்க சிந்தனையில் மிளிரும் இத்தகைய செயற்றிட்டங்கள் தொடரவும் எல்லாம் வல்ல சிவகாமி சமேத நடராஜப் பெருமானின் பாதார விந்தங்களைப் பணிவதுடன் உங்கள் அனைவருக்கும் எனது நன்றிகளையும் அன்பினையும் பகிர்ந்து நிறைவு கொள்கின்றேன்.**

**அன்புடன்**

**சிவசாமி கிருபாகரன்**